செய்தி வெளியீடு எண் : 1137 நாள் : 10.06.2023

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

**வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் மற்றும் கூடுதல் மேம்பாட்டு வசதிகள்.**

**மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின் படி, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள்.

சென்னை, வேளச்சேரி நீச்சல் குள வளாகம் 4,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய இருக்கை வசதிகள், 50மீ x 25 மீ அளவு கொண்ட 8 வரிசைகள் உள்ள ஒரு சர்வதேச தரத்திலான பந்தய நீச்சல் குளம், 18 மீ x 25 மீ x 5 மீ அளவிலான ஒரு குதித்தல் குளம் மற்றும் 25 மீ x 25 மீ அளவிலான ஒரு பயிற்சி நீச்சல் குளம், குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம், இறகுப்பந்து உள்ளரங்கம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளரங்கம் ஆகிய வசதிகளை கொண்டுள்ளது.

சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் அமைந்துள்ள ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் ரூபாய் 1.50 கோடி மதிப்பீட்டில் நவீன ஜிம்னாஸ்டிக் உபகரணங்கள் வழங்கப்பட்டு, புதியதாக பயிற்றுநர் அறை, மாணவ மாணவியர்களுக்கான உடை மாற்றும் அறை மற்றும் ஆண், பெண் இருபாலருக்கான கழிவறைகள் கட்டப்பட்டு மற்றும் எல்.இ.டி. மின்விளக்குகள் பொருத்தப்பட்டு தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

வேளச்சேரி நீச்சல் குளம் வளாகத்தில் தரம் உயர்த்தப்பட்ட ஜிம்னாஸ்டிக்ஸ் அரங்கம் மற்றும் கூடுதல் மேம்பாட்டு வசதிகளை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (10.06.2023) திறந்து வைத்தார்.

இதனை தொடர்ந்து நடைபெற்ற ஜிம்னாஸ்டிக்ஸ் மாணவ, மாணவியர்களின் சாகச நிகழ்ச்சிகளை மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கண்டுகளித்தனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், அவர்கள் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். அரவிந்த் ரமேஷ், பெருநகர சென்னை மாநகராட்சி மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. ஜெ. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., மண்டல குழுத் தலைவர்கள் திரு. துரைராஜ், திரு. ரவிச்சந்திரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in